




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றாக விளங்கும் கபடி விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில், இராமநாதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில், 750–க்கும் அதிகமான கபடி வீரர்களுக்கு மருத்துவக் காப்பீட்டு அட்டை மற்றும் கபடி விளையாட்டுக்குத் தேவையான உபகரணங்கள் அடங்கிய தொகுப்பை வழங்கினார். தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்திடும் வகையில் எண்ணற்ற கபடி வீரர்கள் உருவாகி, முத்திரைப் பதிக்க வாழ்த்தினார். உடன் அமைச்சர் ராஜகண்ணப்பன், மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், நவாஸ்கனி எம்.பி., முருகேசன் எம்.எல்.ஏ உள்ளிட்டோர் உடனுள்ளார்கள்.

## 12,500 கிராம ஊராட்சிகளுக்கும் 25 வகையான விளையாட்டு உபகரணங்களை திராவிட மாடல் அரசு வழங்கியிருக்கிறது!

# சிறந்த கபடி வீரர்களுக்கு 'ஹெல்த் இன்சூரன்ஸ்' திட்டம்; கழக அரசு முயற்சி மேற்கொள்ளும்!

## இராமநாதபுரத்தில் – கபடி வீரர்களுக்கு கழகத்தின் சார்பில் காப்பீடு வழங்கி

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!

இராமநாதபுரம், பிப். 4 –

**இராமநாதபுரத்தில் கழகத்தின் சார்பில் கபடி வீரர்களுக்கு காப்பீடு வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, காப்பீடுகளை வழங்கி, அவர்களை வாழ்த்தி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், "தமிழ்நாடு முழுவதும் சிறந்த கபடி வீரர்களுக்கு அரசின் சார்பில் காப்பீடு வழங்கக்கூடிய திட்டம் குறித்து, முதலமைச்சரிடம் எடுத்துரைத்து, அதனை நிறைவேற்றுவதற்கு கழக அரசு முயற்சிகள் மேற்கொள்ளும்" என்று அறிவித்தார்.**

**இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–**

இதற்கு முன்பு இதே அரங்கில் கழகத்திற்காக உழைத்த, கழகத்திற்காக தியாகம் செய்த, கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து இருந்தார்கள்.

இன்றைக்கு அரங்கில் நாளைய தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமைகளையும், வெற்றிகளையும் தேடித் தரப் போகின்ற கபடி வீரர்களுக்கு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அன்று மூத்த முன்னோடிகளுக்கான விழாவில் பங்குபெறும் பொழுது எவ்வளவு உணர்ச்சி வசப்பட்டு, உணர்ச்சியோடு கலந்து கொண்டேனோ, அதே போல் இன்றைக்கு விளையாட்டு வீரர்களாகிய உங்களைச் சந்திக்கும் போதும் அதே உணர்வு ஏற்படுகிறது. அதே உணர்ச்சியோடு, அதே பெருமையோடு இன்றைக்கு உங்களை எல்லாம் சந்தித்து இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறேன்.

### மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கத்திற்கு பாராட்டுக்கள்!

கிட்டத்தட்ட 1,000 கபடி வீரர்களுக்கு மருத்துவக் காப்பீடு திட்டத்தையும் மற்றும் கபடி விளையாட்டு வீரர்களுக்கு தேவையான ஸ்போர்ட்ஸ் கிட் வழங்குகின்ற திட்டத்தையும் நாங்கள் இங்கு வழங்குவதில் மிகுந்த பெருமை அடைகிறோம். மகிழ்ச்சி அடைகிறோம்.

நிகழ்ச்சியை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள நம் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் காதர் பாட்சா, முத்துராமலிங்கம் அவர்களுக்கு மீண்டும் விளையாட்டு வீரர்கள் உங்களின் சார்பாக எங்களின் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த வித்தியாசமான, மிகவும் தேவையான முன்னெடுப்பின் மூலம், மற்ற மாவட்டக் கழகங்களுக்கு எல்லாம் இராமநாதபுரம் மாவட்டம் ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. ஒரு திட்டத்தை நீங்கள் தொடங்கி வைத்திருக்கிறீர்கள். இராமநாதபுரம் மாவட்டம் அதிகமான விளையாட்டு வீரர்களைக் கொண்ட மாவட்டம்.

குறிப்பாக தேசிய மற்றும் சர்வதேச அளவிலான கபடி வீரர்களை உருவாக்கி வருகின்ற ஒரு சிறப்பான மாவட்டம்தான் இராமநாதபுரம் மாவட்டம். இந்த மாவட்டத்தில் இருந்து புறப்பட்டு வெளி மாநிலங்கள், வெளிநாடுகள் வரை சென்று பல்வேறு சாதனைகளை இராமநாதபுரம் மாவட்ட கபடி வீரர்கள் நீங்கள் புரிந்து வருகிறீர்கள். நம் தமிழ்நாட்டிற்கும் சரி, இந்தியாவிற்கும் சரி பெருமை சேர்த்து வருகிறீர்கள்.

### கபடி வீரர்களுக்கு காப்பீடு

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் கூட, கபடி போட்டியில் இராமநாதபுரம் மாவட்ட கபடி வீரர்கள் நீங்கள் தனி முத்திரை படைத்தீர்கள், தனி சாதனை படைத்தீர்கள். அதற்கு இந்த நேரத்தில், எனது பாராட்டுகள், வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

வீரத்திற்கும், உடல் உறுதிக்கும் பெயர்போன கபடி விளையாட்டில் தலைசிறந்து விளங்குகின்ற உங்களை எல்லாம் பார்க்கும் பொழுது எங்களுக்கு எல்லாம் ஒரு தனி உற்சாகம் பிறக்கிறது.

கபடி என்பது மற்ற விளையாட்டு மாதிரி கிடையாது. மற்ற விளையாட்டுகள் எல்லாம் குறிப்பிட்ட கால விளையாட்டுதான். காலநிலை சரியாக இருக்க வேண்டும், அதற்கான இடம் கிடைக்க வேண்டும். அதற்கான விளையாட்டு வீரர்கள் எல்லாம் வரவேண்டும். டோர்னமெண்ட் நடத்த வேண்டும். அதெல்லாம் குறிப்பிட்ட ஒரு காலத்தில் தான் நடக்கும். ஆனால் எப்போது வேண்டுமானாலும் நடைபெறுகின்ற போட்டி என்றால் அது இந்த கபடி விளையாட்டுப் போட்டிகள்தான்.

கபடி விளையாட்டு வீரர்கள் களத்தில் நீங்கள் விளையாடும் போது உங்களுக்கு எலும்பு முறிவு போன்ற காயங்கள் ஏற்பட அதிகமான வாய்ப்பு உள்ளது. அதனால் சில வீரர்களுக்குத் தேவையான, சிகிச்சைக்குத் தேவையான செலவு அதிகமாக இருக்கின்ற சூழல் நிலவுகிறது. எனவே நமது கபடி வீரர்களுக்கு துணை நிற்கும் விதமாக நம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் இன்றைக்கு ஹெல்த் இன்சூரன்ஸ் கார்டு வழங்குவது மிகப்பெரிய சிறப்புக்குரிய, பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

ஒரு வீரருக்கு தலா 1,324 ரூபாய் செலுத்தி இன்றைக்கு உங்கள் அத்தனை பேருக்கும் இன்சூரன்ஸ் எடுத்துக் கொடுத்திருக்கிறார். இதன் மூலம் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய்வரை நீங்கள் கட்டணம் இன்றி சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம்.

இது மட்டுமல்ல ஒவ்வொரு விளையாட்டு வீரர்களுக்கும் ரூபாய் 3,210 மதிப்புள்ள கபடி காலணிகள், நி கேப், கிட் பேக் அடங்கிய ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்களும் உங்களுக்கு இன்றைக்குத் தரப்பட்டுள்ளது.

நமது திராவிட மாடல் அரசு கடந்த பட்ஜெட்டில் அறிவித்த, தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும், கிட்டத்தட்ட 12,500 கிராம ஊராட்சிகளுக்கும் கிட்டத்தட்ட 25 வகையான விளையாட்டு உபகரணங்களை, ஒரு வருடத்தில் அனைத்து கிராமங்களுக்கும் தந்திருக்கின்ற அரசுதான் நம் திராவிட மாடல் அரசு.

### தமிழ்நாட்டுக்கு விருது

திராவிட மாடல் அரசு விளையாட்டுத் துறையில் பல்வேறு சாதனைகளை தொடர்ந்து செய்து வருகிறது. தொலைக் காட்சிகளில் பார்த்திருப்பீர்கள், செய்தித் தாள்களில் பார்த்திருப்பீர்கள். முதலமைச்சர் விளையாட்டுக் கோப்பை, ஹாக்கி ஏசியன் சாம்பியன்ஷிப், இந்த வருடம் ஜூனியர் ஹாக்கி வேர்ல்ட் கப் நம் தமிழ்நாட்டில் நடக்கப்போகிறது. குவாஷ் வேல்டு கப், பார்முலா–4 ரேஸ் இப்படி பல்வேறு போட்டிகளை நாம் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறோம்.

'தி ஹிந்து ஸ்போர்ட்ஸ் ஸ்டார்' என்ற பத்திரிகை விருது வழங்கும் விழாவில் தமிழ்நாடு அரசு 'தி பெஸ்ட் ஸ்டேட் ப்ரொமோட்டிங் ஸ்போர்ட்ஸ்' என்ற விருதை தொடர்ந்து இரண்டு வருடங்களாக பெற்றுக் கொண்டு வருகிறது.

நாங்கள் இன்றைக்கு இவ்வளவு விளையாட்டுப் போட்டிகள் நடத்துகிறோம் என்றால், அதற்கு ஒரே காரணம் நம் விளையாட்டு வீரர்கள் உங்களின் திறமைகளின் மீது இருக்கின்ற அந்த நம்பிக்கை மட்டும்தான்.

அது மட்டுமல்ல, தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன் என்ற திட்டத்தை முதன் முறையாக ஆரம்பித்து தொடர்ந்து, கிட்டத்தட்ட 16 கோடி ரூபாய் அளவிற்கு ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும், அவர்கள் வெளிநாடு சென்று விளையாடும் போது அவர்களுக்குத் தேவையான தங்குமிடம், விமான பயணச் செலவு, இன்னும் சொல்லப்போனால் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அந்த வீரர்கள் ஒலிம்பிக் போட்டிக்குச் செல்வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே அவர்களை அழைத்து அவர்களுக்கு ஊக்கத் தொகையாக 7 லட்சம் ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருந்தார்.

தமிழ்நாட்டில் இருந்து சென்ற வீரர்கள் பல்வேறு பதக்கங்களை ஒலிம்பிக்கில் இருந்து பெற்று வந்தார்கள். அவர்களுக்குகப் பாராட்டு விழா நடத்தினோம். எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக சட்டசபையிலேயே அறிவித்தோம். மூன்று சதவிகித இட ஒதுக்கீடு என்ற அடிப்படையில், 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பைக் கொடுப்போம் என்று உறுதி அளித்து, சென்ற மாதம் நம் முதலமைச்சர் அவர்களே கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் 84 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை உருவாக்கி கொடுத்தார்.

### அரசு திட்டமாக்க முயற்சி!

இன்றைக்கு இன்சூரன்ஸ் திட்டத்தை நம் மாவட்ட செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார். இது நம் தமிழ்நாடு அரசிற்கே எடுத்துக்காட்டான ஒரு திட்டம். அவர் என்னிடம் சொல்லும் போது சொன்னார்.

இதை இன்றைக்கு நம் கழகத்தின் சார்பாக கொடுக்கிறோம். நாளை அரசின் சார்பாக தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து கபடி வீரர்களும் எதிர்பார்க்கிறார்கள். நிச்சயம் அதை செய்யுங்கள்" என்று சொல்லி இருக்கிறார். நிச்சயமாக இது முதலமைச்சரிடம் பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து சிறந்த கபடி வீரர்களுக்கும் இந்த ஹெல்த் இன்சூரன்ஸ் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல இன்னொரு விஷயத்தையும் அவர் சொல்லி இருக்கிறார். இன்றைக்கு கபடி வீரர்களுக்கு தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், அடுத்த சில நாட்களில் கால்பந்து, ஹாக்கி போன்ற விளையாட்டு வீரர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று சொல்லி இருக்கிறார். அதற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பயன் பெறவுள்ள அத்தனை வீரர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து, கபடி என்பது ஒரு குழு விளையாட்டு. அனைவரும் ஒன்றாகத் சேர்ந்து, ஒவ்வொருவரையும் புரிந்து கொண்டு விளையாடினால் நிச்சயமாக அந்தக் குழு வெற்றி பெறும்.

அதேபோல் நம் தி.மு.க. கூட்டணி என்பதும் ஒரு குழுதான். நீங்கள் களத்தில் குழுவாக ஒன்றாகச் செயல்பட்டு ஒவ்வொருவரையும் புரிந்து கொண்டு, எந்த இடத்தில் விட்டுக் கொடுக்க வேண்டுமோ அந்த இடத்தில் விட்டுக்கொடுத்து, எந்த இடத்தில் அஃபென்ஸ் ஆடவேண்டுமோ அதே போல் ஆடி, நம் தி.மு.க. கூட்டணி, நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, தி.மு.க தலைமையிலான கூட்டணி வருகின்ற 2026–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் நிச்சயம் மிகப் பெரிய வெற்றி பெறும். அதற்கு விளையாட்டு வீரர்களாகிய நீங்களும், இந்த அரசுக்கு இந்த அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் எடுத்துச் சென்று சேர்க்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, கபடி விளையாட்டில் நீங்கள் அனைவரும் பல்வேறு உயரங்களைத் தொட எங்கள் அத்தனைபேரின் அன்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் இன்பா என்.ரகு, ஜி.பி.ராஜா, நகர கழகச் செயலாளர் பசீர் அகமது, நகராட்சி தலைவர் சேனஸ் அபிதா, துணைத் தலைவர் அமீர் சுல்தான், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் முகமது ஜஹாங்கீர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



அருப்புக்கோட்டை அருகில் உள்ள பந்தல் குடியில் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழா, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜா, அருப்புக்கோட்டை நகர்மன்ற முன்னாள் தலைவர் சிவப்பிரகாசம், பந்தல்குடி சாகுல் ஹமீது, விளையாட்டு மேம்பாட்டு அணி ராஜகுரு, இலக்கிய அணி வை.மலையரசன், ஒன்றியச் செயலாளர்கள் பாலகணேசன், பொன்ராஜ், நகரச் செயலாளர் ஏ.கே.மணி, செயற்குழு உறுப்பினர் மாணிக்கவாசகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருச்சுழி அருகே அ.முக்குளம் ஆதிதிராவிடர் காலனியில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நிதியமைச்சர் தங்கம்தென்னரசு நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து நிவாரண உதவி வழங்கினார்.